முருகப்பெருமான் துணை

***இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக கைப்பட எழுதிய நூலாகும்***

***இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்***

**துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு**

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

**பாகம்: 623**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

13.06.2021, ஞாயிற்றுக்கிழமை

1. பார்போற்றும் வள்ளலே அரங்கா வாழ்க
பரமானந்தசதா சிவ சற்குருவே வாழ்க
சீர்திருத்தி இந்த கலியுகம் தன்னை
சித்திமிக்க ஞானயுகமாக மாற்ற வந்த
2. வந்தநல் அரங்கனே ஞானதேசிகனே
வள்ளலே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
சிந்தைபட ஞான அறிவுரை ஆசியை
செப்பிடுவேன் பிலவ விடை திங்கள் தன்னில்
3. தன்னிலே அரங்கனின் அவதாரம் இந்த உலகில்
தண்டாயுதன் என் ஞானஆட்சியை மலரச்செய்ய
அண்ணலே உன் தர்மம் இந்த உலகத்தை
ஆற்றல்மிக்க ஞானலோகமாக மாற்றும்
4. மாற்றம் செய்ய உன் வழி யான் கொண்டு வந்த
மகத்துவமிக்க சன்மார்க்க நெறி தானும்
ஆற்றல்பட மக்களிடை பரவி
அகிலத்தை ஞானயுகமாற்றம் செய்யக்கூடும்
5. கூடவே அரங்கன் உன்வழி தொடரும் தொண்டர்படை
குவலயத்தை தர்மலோகமாக்கி
நாடெங்கிலும் அரங்கன் உன் தர்மபலத்தாலே
ஞானபூமியாக இந்த உலகம் மாற்றம் பெறும்
6. மாற்றம் செய்யவே உன்வழி என் அவதாரம்
மக்களை நோக்கி தயவாக நிகழ்த்தி இருக்க
ஆற்றல்பட உன்னை அறிந்த மக்கள் மூலம்
அகிலமே பாதுகாப்பும் பெருமாற்றமும் காணும்
7. காணவே அரங்கன் தொண்டர்களெனும்
கருணைமிக்க சக்திகள் மூலமாக
ஞானம் உலகமெங்கும் பரவி
ஞானபண்டிதன் என் வழிபாடும் நிரம்பி
8. நிரம்பியே என் அருள்பட உலகோருக்கு
நிலைத்தன்மை கூடி இந்த கலியின் இடர்களெல்லாம்
பலமிழந்து உலகோருக்கு பாதுகாப்பு மிக்க
பாடிடுவேன் அரங்கன் உன் ஞானசித்தராட்சி காலமாக மாறும்

9. மாறுதலை உன்வழி செய்தருள
மண்ணுலகில் மகான் சுப்ரமணியர் யானும்
ஆறுதல்பட உமக்கு ஞானம் அருளிவர
அரங்கனே உன்னால் உலகமாற்றம் சடுதிகாணும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–

*ஐயன் வேலவன் அடியினைப் போற்றிட*
*வையகம் போற்ற வாழ்வார் நலமே!*
*பற்றறுத்த வேளலவன் பதத்தை பற்றிட*
*நற்றவமும் சித்திக்கும் நமனும் அஞ்சுவன்!*
*ஆட்சிதான் மாற்றமும் அருளுவான் வேலனும்*
*மாட்சிமை மிக்க மக்கள் வாழவே!*

துறையூர் ஓங்காரக்குடில் மூலமாக ஆசான் முருகப்பெருமான் ஆசியால் 20 கோடி பேர்களுக்கு மேலாக தொடர்ந்து அன்னதானம் செய்து வருகிறோம். இனிவரும் காலங்களிலும் முருகப்பெருமான் துணையுடன் மேன்மேலும் சிறப்பாக அன்னதானம் செய்வோம்.

– ஆறுமுக அரங்கமகா தேசிகர்.